Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள் 04 விலை ரூபா 4-00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம்: 01 தை (14 - 01 - 1991) திங்கட்கிழமை ஓசை 330

## ஓய்வூதிய கொடுப்பனவிற்கு அங்கீகாரம் இல்லை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு ஓய்வூதியத் திணைக்களத்தில் இருந்து ஓய்வூதியக் கொடுப்பனவுகளை அங்கீகரிக்கும் பணிக்கொடை அங்கீகாரக் கடிதங்கள் யாழ். செயலகத்துக்கு இதுவரை வந்துசேரவில்லை. கடைசியாக வந்த இமணக் கப்பலிலும் இந்த அங்கீகாரக் கடிதங்கள் யாழ் செயலகத்துக்கு அனுப்பிவைக்கப்படவில்லை என்று யாழ் செயலக (4ஆம் பக்கம் பார்க்க)

ஐரோப்பிய பாராளுமன்ற அமைப்பு காணாமற்போனோர் தொடர்பாக

# சுதந்திர ஆணைக்குழு நிறுவ சிறிலங்காவிடம் கோரிக்கை

(ஜெனிவா)

சிறிலங்காவில் காணாமற்போனவர்கள், சட்டத்துக்கு மாறாக மரணதண்டனை விதிக்கப்பட்டவர்கள் தொடர்பாக விசாரிக்க சுதந்திரமான ஆணைக்குழுவொன்றை நிறுவி, அதன் பரிந்துரைகளை வெளியிடுமாறு ஐரோப்பிய பாராளுமன்ற அமைப்பு ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானமொன்றில் சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளது.

மேலும் தடுப்பு முகாம்கள், பொலிஸ் நிலையங்களில் காவலில் வைக்கப்பட்டுள்ளவர்கள், வேறு சட்ட விரோத முறைகளில் இறைவாசம் அனுபவிப்பவர்களின் பெயர்ப்பட்டியலை உடனடியாக வெளியிடுமாறும் அந்தத் தீர்மானம் சிறிலங்கா அரசாங்கத்தை வலியுறுத்துகின்றது.

சிறிலங்காவில் காணாமற் போனவர்கள் பற்றி விசாரித்துத் தரவுகளைத் தெரிந்து கொள்ள ஐக்கிய நாடுகள் குழு வொன்றை பெப்ரவரி 15ஆம் திகதிக்கு முன்னதாக சிறிலங்கா வருவதற்கு அனு (4ஆம் பக்கம் பார்க்க)

## ரவிராய்சிறிலங்கா வருகிறார்

இந்தியப்பாராளுமன்றசபாநாயகர் ரவிராய் நாளை செவ்வாய்க்கிழமை பொதுநலவாய கருத்தரங்கில் கலந்துகொள்வதற்காக சிறிலங்கா வரவுள்ளார்.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## நீலாவணையில் இரு இளைஞர்கள் கைது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டப் படுவான்கரைப் பகுதியிலிருந்து பெரிய நீலாவணைக்குச் சென்ற இருஇளைஞர்கள் சிறிலங்கா இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். நல்லதம்பி சந்திரகுமார், முருகன் சங்கரன் என்ற கோயில் போரதீவு கிராமத்தைச் சேர்ந்த இவர்கள் கடந்த திங்களன்று கைது செய்யப்பட்டனர் ஆயினும் இவர்கள் பற்றியவிபரம் எதுவும் தெரியவரவில்லை.




## ஆறு மாதத்துக்குள் புலிகளைத் தீர்த்துக்கட்டி விடுவோம்

– ஹமில்டன் வணசிங்கா

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில்விடுதலைப் புலிகளையும்அதன் தலைமைகளையும் அடுத்தஆறுமாதத்துக்குள் சிறிலங்கா இராணுவத்தால் தீர்த்துக் கட்டிவிடமுடியுமென்று இலங்கை இராணுவத் தளபதி ஹமில்டன் வணசிங்கா கொழும்பில் கூறியுள்ளார். போதிய ஆயுதங்களுடன் இலங்கை அரசு இதற்கு ஆயத்தமாக இருப்பதாகவும், வளை குடாப் போர் ஏற்பட்டால் எரிபொருள் பற்றாக்குறை வந்தாலும் புலிகளை சிறிலங்காப் படைகள் வெல்லும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இனவிகிதாசார அடிப்படையில் பதவி உயர்வு கூடாது

உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

இனவிகிதாசார அடிப்படையில பதவி உயர்வு பரிசீலிக்கப் படக்கூடாதுஎன்று சுங்கஉதவி அத்தியட்சகர் பொன்னம்பலம் இராமுப்பிள்ளை சமர்ப்பித்த மனு ஒன்றின்மீது உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## பொருளாதார தடைக்கு எதிராக வடமராட்சியில் ஆர்ப்பாட்டம்

(வட மராட்சி)

சிறிலங்கா இனவாத அரசின் இன அழிப்பு நடவடிக்கையை கண்டிக்கும் முகமாகவும், பிரகடனப்படுத்தப் படாத பொருளாதாரத் தடையை நீக்குமாறும் கோரி வடமராட்சியில் நேற்று பிரமாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெற்றது.

நெல்லியடி பஸ் நிலையத் (4ஆம் பக்கம் பார்க்க)

கிளிநொச்சி குண்டு வீச்சில்

## இறந்தோர்தொகை 9 ஆகஉயர்வு 20 பேர்காயம்; 15 கடை சேதம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் நேற்றுமுன்தினம் காலை முதல் மாலை வரை இடம்பெற்ற பலத்த விமானக்குண்டு வீச்சின்போது ஒன்பதிற்கும் மேற்பட்டோர் பலியாகினர். சுமார் இருபது பேர் வரையில் காயமடைந்தனர். சுமார் பதினைந்து கடைகளும், இரண்டு வொறிகளும், பதினெட்டுச் சைக்கிள்களும்,

(4ஆம் பக்கம் பார்க்க)

## கன்னியாஸ்திரியிடம் இளைஞர் 7000ரூபா மோசடி

(செ.த.மை)

கன்னியாஸ்திரியிடமிருந்து 7,000 ரூபா ரொக்கப் பணத்தையும் விலை பெறுமதியான பொருள்களையும் அபகரித்துக்கொண்டு தலைமறைவாகிவிட்ட இளைஞர்ஒருவர், விடுதலைப்புலிகளின் வலையில் சிக்கியுள்ளார். இவரிடமிருந்து அபகரிக்கப்பட்ட பொருள்களும் கைப்பற்றப்பட்டன.

பாஷையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த சகோதரி தெரசிற்றா அவர்கள் நேற்று முன்தினம் கிளிநொச்சியிலிருந்து, யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த பொழுது இச்சம்பவம் இடம் பெற்றது.

(4ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்கு புதிய பிரிகேடியர்

(வவுனியா)

வன்னிப் பகுதி பிரிகேடியராக புதிதாக ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

அம்பாலையைச் சேர்ந்த அசோகா ஜெயவர்த்தனா என்பவரே பாதுகாப்பு அமை (4 ஆம் பக்கம் பார்க்க)

அதிரடிப்படை முகாம் சென்ற சர்வதேச செ, ச. அதிர்ச்சி

## 4இளைஞர் இறந்து கிடந்தனர்; 40பேர்படுகாயமாக இருந்தனர்

(அக்கரைப்பற்று)

அதிரடிப்படை முகாமில் இருந்த தமிழ் இளைஞர்களைப்பார்க்கச் சென்ற சர்வதேசசெஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளுக்கு அங்கு அதிர்ச்சி காத்திருந்தது. தடுத்து வைக்கப்பட்டிருந்த நாற்பத்தி நான்கு இளைஞர்களில் நால்வர் இறந்து கிடந்தனர். ஏனையோர் கடும் காக்குதலுக்கு உள்ளாகி பரிதாபகரமான நிலையில் கிடந்தனர்.

இதுபற்றித் தெரியவருவதாவது கடந்த வெள்ளிக்கிழமை அக்கரைப்பற்று அதிரடிப்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 44 தமிழ் இளைஞர்களைப் பார்வையிடுவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அங்கு சென்றிருந்த சமயம் அதிரடிப் படையினரின் பலத்த தாக்குதலினாலும் சித்திரவதையினாலும் நான்கு இளைஞர்கள் இறந்து கிடந்தனர். ஏனைய 40 பேரும் படுகாயமடைந்திருந்தனர்.

(4ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவத்தின் முயற்சிமுறியடிப்பு

(ஆனையிறவு)

துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டபடியே முன்னுக் கம்பி வேலியமைக்க ஆனையி

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

**பயிற்சி ஆரம்பம்**

பெண்களின் மேக்-அப் வகுப்புக்கள் இம்மாதம் 20, 21 ஆம் திகதிகளில் நடைபெறும் நேரம் பிற்பகல் 1 00 மணி தொடக்கம் 4.00 மணிவரை மேலும் விபரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும் அனிற்றா பயிற்சி நிலையம், K K S வீதி, பூநாறிமரத்தடி, கொக்குவில். மற்றும் மனையியல் டிப்ளோமா வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. (B- 1856)

---

''டிப்ளோமா ஹோம் எக்னமிக்ஸ்'' ஆடை தயாரிப்பு, பற்றிக் தணி வர்ணசாயமிடல், சிகையலங்காரம் விதம் விதமான கேக் தயாரிப்பு, உணவு தயாரிப்பு, கைவேலைகள், பூவேலைகள் ஆகிய பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன அனித்தா பயிற்சி நிலையம், K.K.S. வீதி, பூனாறிமரத் தடி கொக்குவில். (B- 1857)

---

**தேவை**

பாலர் வகுப்பிலிருந்து A/L வரை தங்களால் இயன்ற பாடங்களைத் தனிப்பட்ட முறையில் கற்பிப்பதற்கு ஆசிரியர்கள் தேவை மாலை 2.00 3.00ற்குள் உங்கள் தராதரத்துடனும், அனுபவத்துடனும் நேரடியாகச் சந்திக்கவும் ஆறுமுகநாதன் 10, சுச்சேரி இழக்கு ஒழுங்கை சுண்டுக்குளி.

(R- 1023)

---

உதவி வைத்தியர் (DAM) அல்லது (MDH) மற்றும் மருத்துவ உதவியாளர் தேவை தொடர்பு: நவீன வைத்திய சாலை, 101 33ஆம் இல, பலாலி வீதி, கந்த மடம்.

(R-1025)

---

**வெளிவந்துவிட்டது**

வர்த்தகமும் நிதியும் - உயர்தர வகுப்புகளுக்குரியது. உள் நாட்டு வியாபாரம், வெளிநாட்டு வியாபாரம், உற்பத்தி வர்த்தகத்துடன் தொடர்புடையநிறுவனங்கள், சந்தைப்படுத்தல் ஆகியவற்றுடன் வெளிவந்து விட்டது. தொகுப்பு;தேவராஜன் ஜெயராமன் B Com (Hons) விலை ரூபா 48/- வெளியீடு விற்பனை: பூபாலசிங்கம் புத்தக சாலை, யாழ்ப்பாணம்.

(B/1804)

---

**தவறிவிட்டது**

சின்னத்துரை சிவகுமாரி என்பவருடைய அடையாள அட்டை இல. 667790926V நூநகரிக்கும் முழங்காவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் உண்டு

(R- 1031)

---

ஆண்டு 6 — ஆண்டு 11 வரை

# இலவச கல்வி

மாவீரர்களின் குடும்ப அங்கத்தவர்களிற்கு மேற்படி வகுப்புகளில் இலவசமாக அனுமதி வழங்கப்படும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

அவ்வப் பகுதி விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளரின் சிபார்சுடன் தொடர்பு கொள்ளவும்.

**எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்**

**இருபாலைச்சந்தி.**

- அதிபர்

(R- 1028)

---

# RADIO - T.V & VIDEO DECK

**புதிய பயிற்சி நெறி ஆரம்பம்**

**16-1 1991**

- ★ இலகு விளக்கம்
- ★ சிறந்த ஆசிரியர்
- ★ செய்முறையுடன் கூடிய துரித பயிற்சி நெறி

விபரங்களுக்கு:


**North Ceylon Technical Institute**

14. St. Peter's Lane,
Hospital Road,
JAFFNA.

(B- 1836)

---

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## குமாரசாமி தர்மலிங்கம்

(இறைவரி உத்தியோகத்தர் பளை)

வந்துதிப்பு: 08 - 09 - 1937
வஞ்சகர் அழிப்பு: 25 - 01 - 1989

**திதி: 14 01–1991**

வஞ்சகரின் வெறித்தனத்தால் பாதி வழியிலே நின்பயணத்தை முடித்துக்கொண்டாய். எம்மேல் வைத்திருந்த அவ்வுயிரை காலன் கவர்ந்து சுரான்டாகினும் எம்நெஞ்சிலே நித்தம் நிறைந்திருக்கும் எம் அன்புத்தெய்வமே உம் ஆத்மா சாந்தியடைவதாக.

சுட்டுடை,
மானிப்பாய்.
(R/1000)

நின் பிரிவால் வாடும்;
மனைவி, மகன் – முரளி,
மகள் - றாஜி.


---

## கம்பியூட்டர் கல்வி

- *Diploma in Data Processing and Computer Programming in Basic Language.*
- **ஆரம்பம்: 25-01-1991** 10-30 a. m.
(திங்கள், புதன், வெள்ளி வகுப்புக்கள்)
**27-01-1991** 10-30 a. m.
(சனி, ஞாயிறு வகுப்புக்கள்)
O/L படித்த இரு பாலாரும் சேரலாம்.

பல்கலைக்கழக புகுமுக, பல்கலைக்கழகத்தில் பயிலும் மாணவர்களுக்கும், லண்டன் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களுக்கும் உகந்த வகையில் விளக்கமான முறையில் கற்பிக்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:



# UNIKCO COMPUTER CENTRE

**37, CLOCK TOWER ROAD,**
**JAFFNA.**

(வெலிங்டன் சந்திக்கு அருகாமையிலுள்ள மேல்மாடி)

(B. 1854)

---

# ராஜா காமென்ற்ஸ்

★ ராஜா காமென்ற்ஸ் ஸ்தாபனத்தாரின் நம்பிக்கைத் திறன்கூடிய தரமான றெடிமேட் ஆடைத்தினுசுகள் இன்றைய நவநாகரீக முறைகளில்

❋ ஆடவர் ❋ நங்கையர் ❋ மழலைகள்

★ அனைவரினதும் தேவைக்குகந்த வகையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

(வியாபாரிகளுக்கு விஷேட கழிவு உண்டு)

விபரங்களுக்கு:

**யோகாஸ் புடைவை மாளிகை**
இல, 16, பெரியகடை.

**குமார் புடைவை மாளிகை**
முத்திரைச்சந்தி, நல்லூர்.

(B-1785)

---

# நினைவு கூருகின்றோம்

# தை 14

1987இல் வீரமரணமடைந்த

**மணி** (இ. மாசிலாமணி - அம்பாறை)

**ஜஸ்டின்** (ச. செல்வராசா - சாம்பல்தீவு)

1988இல் வீரமரணமடைந்த

**கர்ணன்** (க. சந்திரன் - கிளிநொச்சி)

**பிரசாத்** (சி. இராசேந்திரகுமார்)

1989இல் வீரமரணமடைந்த

**யூலியன்** (சகாயநாதன் - மன்னார்)

**விஜி** (காந்தரூபன் - கொக்குத்தொடுவாய்)

**அல்பேட்** (கணேஸ்வரன் - கணேசபுரம்)

**குகேந்திரராசா** (மு குகேந்திரராசா)

**கிருஷ்ணா**

**டில்சுகோ** (சண்முகசுந்தரம் – வல்வெட்டித்துறை)

1990இல் வீரமரணமடைந்த

**சின்னவன்** (கா. இந்திரகுமார் - வாழைச்சேனை)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

*நித்தமும்*
*இங்கு சத்தங்கள்*
*இங்கு சாவுகளே*
*சரித்திரம் ஆகி*
*மரணமே மரணித்துப் போயிற்று*

**– விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(B-184 1)

---

" அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் இனிய பொங்கல் வாழ்த்துக்கள் "



**கடின உழைப்புக்கு நிகர் எதுவுமில்லை.**

அன்பளிப்பு . மில்க்வைற் யாழ்ப்பாணம்.

சலவைப் பவுடர் வெற்றுப் பக்கெற் 25 சேர்ப்பித்து ஒரு அப்பியாசக்கொப்பி அன்பளிப்பாகப் பெற்றுக்கொள்ளுங்கள்

**மில்க்வைற் - யாழ்ப்பாணம்.**

(B/ 1839)

## சிந்தனைக்கு

கடின உழைப்புக்கு நிகர் எதுவுமில்லை.

— மகாத்மாகாந்தி


# ஈழநாதம்

81, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 14-01-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
தா. பெ. எண் 05


# தையுடன் வழியைத் தேடிக்கொள்வோம்

## இன்று தமிழர் தைப்பொங்கல் திருநாள் ஆகும்

இது உழைப்பாளிகளின் பெருநாளும் கூட.

எமது முன்னோர் தமது உழைப்பின் அறுவடையைப் பெற்று, அவ்வுழைப்பிற்கு உதவியவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாக இவ்விழாவை எடுத்தனர்.

அத்தோடு, அறுவடையைப் பெறுவதினால், தமது இன்னல்கள் தீர்ந்து போகும் நன்னாளாகவும் இதனைக் கொண்டாடிவந்தனர். இதனால், தமிழர் ஆண்டின் தை மாதம் முதலாம் திகதி வரும் இத்திருநாள் நல்வாழ்க்கைக்கு வழி காட்டும் ஒரு நன்னாளாகவும் கொண்டாடப்பட்டது. ஆகையினால் இந்த நன்னாள் வருவதையிட்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

ஆனால் இலங்கைத் தமிழர் பல வருடங்களாக உழைத்த போதும் இன்னும் தமது சுதந்திரமானதும், பாதுகாப்பானதுமான வாழ்க்கைக்கு இன்றும் வழி பிறக்கவில்லை. அதாவது இன்றும் உழைப்பிற்கான அறுவடை பெறப்படவில்லை.

இந்த அறுவடைக்காக இலங்கைத் தமிழரின் முதலீட்டை அளவிட முடியாது. மதிப்பற்ற பல ஆயிரம் உயிர்களை இழந்திருக்கின்றோம். பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்களைப் பலி கொடுத்துள்ளோம். இப்பெரும் உழைப்பின் மத்தியிலும் எமது அறுவடை இன்றும் எமது கைகளை வந்தடையவில்லை.

ஆனால், எமது உழைப்பின் பலாபலன் எமது கைகளை வந்தடையும் என்ற நம்பிக்கை எமக்கு பலமாக உள்ளது. அண்மைக்கால எமது முன்னேற்றங்கள், வெற்றிகள் அலவ எமக்கு அந்தநம்பிக்கையை வளர்க்கின்றன.

அதேவேளை, நாம் பதினைந்து வருடங்களுக்கு மேலாக அறுவடைக்காக உழைத்துவிட்டோம். எமது கையில் இன்னும் ஏன் இந்த அறுவடை கிடைப்பதற்குத் தாமதமாகின்றது என்பதையும் நாம் சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். அவ்வாறு சிந்திக்கத் தவறுவோமேயானால் அறுவடை எமது கைக்கு என்றுமே வந்து விடாமல் சென்று விடக்கூடும்.

இந்த நிலையில், உழைப்பிற்கான பலன் கிடைக்கவில்லை என்றால் ஒன்று நாம் அதற்காக உழைத்து போதாமல் இருக்கவேண்டும். அல்லது அறுவடையைப் பெற முடியாமல் ஏதோ ஒன்று தடுத்தல் வேண்டும் அல்லது இரண்டும் ஒன்றாகச் செயற்பட வேண்டும்.

இதில் எமது அறுவடையைப் பெறுவதற்கு எமது உழைப்புப் போதாமையும், தடையும் ஆகிய இரண்டுமே ஒன்றாக இணைந்து செயற்பட்டு வருவதாக உணரக் கூடியதாக உள்ளது. ஆகையினால், இவை இரண்டையும் மீறியே நாம் எமது அறுவடையைப் பெற முடியும்.

பயிரை விதைத்துவிட்டால் மட்டும் போதாது அது பலன்தருவதற்கு அதற்கு உரமிட்டு களை எடுத்து நீர் பாய்ச்சினாலே முழுமையான பலனை அதில் இருந்து பெறமுடியும். இதைப் போன்றே விடுதலைப்போராட்டமும் விடுதலை என்று பேசிவிட்டால் மட்டும் வந்துவிடாது; அதற்கும் உரமிட்டு, களை எடுத்து நீர்ப்பாய்ச்சினாலே விடுதலை என்னும் பயிர் செழித்தோங்கி வளர்ந்து பலன் தரும். இன்று எமது விடுதலைப் பயிர் உரமிட்டு களை எடுத்து பூத்துக் குலுங்கும் விடலைப் பருவத்தில் உள்ளது. இனி நீர்ப்பாய்ச்சி அறுவடைசெய்தல் மட்டுமே எஞ்சியிருக்கும் கடமையாகும்.

இந்த நிலையில் அவ்வறுவடையைப் பெறுவதற்கு உழைப்பதுதமிழர்அனைவரதும்கடமையாகும். இது இறுதிக் கட்ட முயற்சியாக இருப்பதனால் கடுமையானதாகத்தான் இருக்கும், ஆனால் மனம் சோர்ந்துவிட முடியாது.

இந்த இறுதிக்கட்ட வெற்றிக்கு தமிழர் அனைவரும் ஒன்று திரண்டு முன்வரவேண்டும். தமிழ் மக்கள் முன்னால் உள்ள அரசியல், பொருளாதார, இராணுவத் தடைகள் யாவும் உடைத்தெறியப்பட வேண்டும். இதில் இருந்து தமிழர்கள் ஒதுங்கிக் கொள்வதும், விரோதமாகச் செயற்படுவதும் வெண்ணெய் திரண்டு வரும் வேளையில் தாழியை உடைத்ததிற்கு ஒப்பான செயலாகும்.

ஆகையினால் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்ற நம்பிக்கையைக் கொடுக்கும் நல்லறிவிப்பைக் கொடுக்கும் தைப்பொங்கல் திருநாளில் எமது விடுதலைக்கான வழியில் மேலும் முன்னேறுவோம் என்ற உணர்வுடன் பொங்கலை நாமனைவரும் இன் முகத்துடன் வரவேற்போம்.

# முப்பெருமை வாய்ந்த தமிழர் திருநாள்

பொங்கல் - தமிழர் திருநாள் இறைவனுக்கு நன்றிக் கடன் செலுத்தும் நன்னாள்.

தமிழரின் புதுவருடம்-தமிழ் மக்களுக்கும், உலகத்திற்கும் தெய்வீகத் திருக்குறளை அளித்த திருமகன் திருவள்ளுவரின் 2022 ஆண்டு தொடக்கம். டாக்டர்அல்பேற் சுவைட்சரின் 116ஆம் ஆண்டு பிறந்த நாள். திருக்குறளில் வாழ்க்கை வாழ்வதற்கே' என்றதத்துவம் இருப்பதாக உலகத்திற்கு எடுத்துக் காட்டினார் டாக்டர் அல்பேற் சுவைட்சர். ''ஒவ்வொருவரும் தனக்குத் தானே செய்ய வேண்டிய கடமை என்ன? மற்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமை என்ன என்பனவற்றையெல்லாம் சிறந்த பண்பாட்டோடும், மதிநுட்பத்தோடும், வள்ளுவர் பேசுகின்றார். உலக இலக்கியத்தில் இத்தகைய மாண்புமிக்க மெய்யறிவு வேறு எந்த நூலிலும் இத்துணைச் சிறப்பாகப் பொலிவுறவில்லை என்று சொல்லலாம்''. ''பொது நீதிகளைப்பற்றி கூறும் திருக்குறளில் பயன்

ந. யோகநாதன்

கருதிய பணிகளுக்கு வேறு தத்துவ நூல்கள் கொடுக்கும் ஆதிக்கம் அளிக்கப்படவில்லை'' ''தமிழரின் பாரம்பரிய குறிக்கோள்களுக்கு எடுத்துக் காட்டும் வாழ்க்கை உறுதிப்பாடு, செயற்பாடு முதலியன திருக்குறளில் புதைந்து புத்துயிர் ஊட்டுகின்றன''.

''விசேடமாக திருக்குறளிலே அற்புதமான நீதிநெறி வாழ்க்கையுடன் உயிர்த் தன்மை நிறைந்த உள்அன்பு நெறியும் (Active Love) இணைக்கப்பட்டுள்ளது''

உலகில் பிரசித்தி பெற்ற ஐரோப்பிய ஞானிமூலம் கிடைத்த பாராட்டு ஒவ்வொரு தமிழனின் கவனத்தில் எடுக்க வேண்டிய மகிழ்ச்சி தரும் செய்தியாகும். இத்தினம் டாக்டர் அல்பேற் சுவைட்சரையும் அவரின் ஆழ்ந்த சிந்தனைக் கருத்துக்களையும், செயல்களையும் நினைவு கூருவது எமது உரித்தான நன்றிக்கடனாகும்.

செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது
-தெய்வீக திருக்குறள் 101.

ஒவ்வொரு தமிழனும் திருக்குறளை தமிழர்தேசிய நூலாகக் கருதி, அதன்படி வாழமுயற்சி எடுத்து, சகோதரத்துவத்துடனும் சமாதானத்துடனும் வாழ்வோமாக. கலாநிதி அல்பேற்சுவைட்சருக்கு கிடைத்த உலக சமாதான நோபல் பரிசின் முக்கியத்துவத்தை உணர்ந்து அவ்வுலக சமாதானத்தை நோக்க முன்னேறிச் செல்வோமாக.

# அமெரிக்காவில் பரவலாக போருக்குஎதிரான ஆர்ப்பாட்டம்

(வாஷிங்டன்)

வளைகுடாவில் போர் மூளுவதற்கான சாத்தியங்கள் அதிகரித்து வரும் நிலையில் அமெரிக்கா முழுவதிலும் நாடு தழுவிய ரீதியில் போருக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

இந்த ஆர்ப்பாட்ட ஒழுங்குகளை மத்திய கிழக்கில் சமாதானத்திற்கான தேசிய இயக்கமும், மத்திய கிழக்கில் அமெரிக்க தலையீட்டைத் தடுப்பதற்கான கூட்டணியும் ஒழுங்கு செய்துள்ளன.

ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் வரும் 19 ஆம் 26 ஆம் திகதிகளில் வாஷிடனில் நடைபெறும் என மேற்படி இயக்கத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் ஈராக்கிற்கு எதிரான காலக்கெடு முடிவடையும் தினத்திற்கு முதல் நாள் திங்கட்கிழமை சமாதான விரும்பிகள் அமெரிக்க நகரங்களில் மெழுகுதிரி வெளிச்ச ஆராதனைகளையும், காலக்கெடு தினமான ஜனவரி 15 ஆம் திகதி நகர சதுக்கங்களில் பிரார்த்தனைக் கூட்டங்களையும் நடத்த தீர்மானித்துள்ளனர்.

# சோவியத் ராணுவம் சுட்டு லித்வேனியாவில் 15 பேர் பலி

(மொஸ்கோ)

லித்வேனியாவில் சோவியத் யூனியனின் இராணுவத்தினர் சுட்டதில் 15க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டனர். 100க்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

நேற்றுக்காலை சோவியத் யூனியனின் இராணுவத்தினர் லித்வேனியாவில் உள்ள தொலைக்காட்சி நிலையம் மற்றும் வானொலி நிலையத்தை கைப்பற்ற முயற்சி செய்ததன் போதே இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தின் போது மக்கள் மீது ராணுவத்தினர் இயந்திர துப்பாக்கிகள் கொண்டு சுட்டதாகவும் இதனால் 15 பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர் என்றும் 100 பேர் படுகாயமடைந்தனர் எனவும் பி.பி.ஸி. அறிவித்தது.

லித்வேனியாவை சோவியத் யூனியனின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரும் முயற்சியாகவே இந்த நடவடிக்கைகள் அமைகின்றன எனசெய்திகள் தெரிவிக்கின்றன.

# பாண்டிச்சேரியில் ஜனாதிபதி ஆட்சி

(டில்லி)

பாண்டிச்சேரி சட்டப்பேரவையின் செயற்பாடுகள் ஜனாதிபதியின் ஆளுகைக்குக் கீழ் கொண்டு வரடபட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமையில் இருந்து ஜனாதிபதி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டதாகவும், ஆறுமாத காலத்திற்கு பாண்டிச்சேரி சட்டப்பேரவையின் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும் புதுடில்லியில் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

பல்வேறு காரணங்களால் இந்திரா காங்கிரஸ், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழகம், ஜனதாதள் எஸ் கட்சி ஆகியன அரசாங்கம் அமைக்கவில்லை. இதன் காரணத்தினால் பாண்டிச்சேரியில் சட்டப் பேரவை முடக்கி வைக்கடபட்டது.

இதே வேளை முதலமைச்சர் டி. ராமச்சந்திரனின் பதவி விலகல் கடிதத்தையும் ஜனாதிபதி ஆர். வெங்கட்ராமன் ஏற்றுக் கொண்டுள்ளார். பாண்டிச்சேரி ஆளுநர் ஹரிவனப் சிங்கின் மூலம் தனக்கு நீதி கிடைக்காது என முதலமைச்சர் பதவியை டி. ராமச்சந்திரன் ராஜினாமாச் செய்தது தெரிந்ததே.

# மாவீரர் குடும்பங்களுக்கு இலவச அனுமதி

(யாழ்ப்பாணம்)

மாவீரர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு ஆண்டு 6 முதல் ஆண்டு 11 வரைஇலவசமாக கல்விகற்க இருபாலை எக்ஸ்பிரஸ் இன்ஸ்ரிரியூட்டில் அனுமதிவழங்கப்படவுள்ளது.

மேற்படி குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்கள், அந்தப் பகுதி விடுதலைப் புலிகளின் பிரதேசப் பொறுப்பாளர் சிபாரிசுடன்தொடர்பு கொள்ளும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

# பாலர் கழகத்தின் பொதுக்கூட்டம்

(உரும்பராய்)

யாழ். பாலர் கல்விக்கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2-30 மணியளவில் 49/5 யாழ் வீதியில் உள்ள பாலர் பாடசாலை மண்டபத்தில் கழகத் தலைவர் திரு. ஆ. செல்லையா அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்தில் பாலர் பாடசாலைகளின் (25 ஆவது ஆண்டின்) வெள்ளிவிழா பற்றி ஆராய்வதுடன், இலவச பாலர் பாடசாலை நடாத்துவது பற்றியும் தீர்மானிக்க உள்ளனர். (32)

# பாலபண்டித வகுப்புக்கள்

ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்க பண்டிதர், பாலபண்டிதர் வகுப்புக்கள் எதிர்வரும் ஜனவரி 20 காலை 9-00 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் ஆரம்பமாகின்றன.

இவ்வகுப்புக்களில் சேர விரும்புவோர் குறித்த திகதி பாடசாலை வந்து பெயர்களைப் பதிவு செய்து கொள்ளலாம். பாலபண்டிதர் வகுப்பில் சேர க. பொ. த. (உ/த) பரீட்சையில் தமிழை ஒரு பாடமாகத் தெரிந்து திறமைச் சித்தி பெற்றோரும், பிரவேச பண்டிதர் சித்திபெய்தியோரும் சேரலாம். பண்டிதர் வகுப்பில் சேர, பாலபண்டிதர்ப் பரீட்சை சித்தி பெற்றவராகவோ, பல்கலைக்கழகக் கலைமாணிப் பரீட்சையின் தகுதி காண் பரீட்சைக்குத் (G. A Q.) தமிழைப் பாடமாகத் தெரிந்து சித்தி பெற்றவராகவோ இருத்தல் வேண்டும். என மேற்படி சங்கத்தின் செயலாளர் திரு. க. சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

# வீடியோ திரைப் படத்திற்கு 15 ரூபா

(குருநகர்)

வீடியோமூலம் திரைப்படக் காட்சி பார்க்கப் பதினைந்து ரூபா அறவிடப்படுகிறது.

எங்கே என்று கேட்கிறீர்களா?

உணவுப் பற்றாக்குறையும், எரிபொருள் தட்டுப்பாடும் நிலவும் யாழ். நகரிலே தான்.

கடந்த வியாழக்கிழமை இரவு இக்காட்சியாழ். மனோகராத்திரையரங்குப் பகுதியில் நடைபெற்றதாக அறியவந்துள்ளது.

ஜெனரேட்டர் மின்சாரத்தில் இந்தியத் திரைப்படங்கள் காட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (21)

# ஈராக்கிற்கு எதிரான போருக்கு அமெரிக்க காங்கிரஸ் அங்கீகாரம்

(பாக்தாத்)

குவைத்திலிருந்து ஈராக்கும், வளைகுடாவிலிருந்து பன்னாட்டுப் படைகளும் ஒரே நேரத்தில் விலகுவது குறித்த ஒரு தீர்மானத்தை ஐ. நா. சபையின் தலைமைச் செயலாளர் பெரஸ்டி குயிலர் முன் வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் பாக்தாத்தில் ஈராக்கிய வெளியுறவு அமைச்சர் தாரிக்அஸீஸையும் நேற்று ஜனாதிபதி சதாம் ஹுசைனையும் சந்தித்த பெரஸ்டி குயிலர் மேற்குறிப்பிட்ட தீர்மானம் குறித்து இவர்களுடன் பேசியதாகத் தெரிவித்தார்.

இதற்கு முன்னதாகப் பாக்தாத் வந்தவுடன் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் ''குறிப்பான திட்டம் எதுவும் தம்மிடம் இல்லை என்றும், குவைத்தொடர்பாக ஏற்படும் ஒரு போரை தவிர்க்க முடியும் என்றும், உலக மக்களின் நல்லெண்ணத்தையும், ஆசையையும் கொண்டுவந்ததாகத் தெரிவித்தார்.

அமெரிக்க காங்கிரஸின் அங்கீகாரம்

ஐ. நா. சபையின் காலக்கெடு என நாளையதினம் முடிவடைந்தவுடன் ஈராக் மீது படைப்பலத்தைப்பயன்படுத்த அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷிற்கு அமெரிக்க செனட் சபைஅங்கீகாரமளித்துள்ளது. 52 உறுப்பினர்கள் ஆதரவளித்தும், 47உறுப்பினர்கள்எதிர்த்தும் வாக்களித்தனர். அதே வேளை காங்கிரஸ் உறுப்பினர்கள் 250 பேர் ஆதரவாகவும், 183 பேர் எதிராகவும் வாக்களித்தனர்.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் அமெரிக்கப் பாராளுமன்றம்போர் ஒன்றை நடாத்த ஜனாதிபதிக்கு அனுமதியளிப்பது இதுவே முதல் தடவையாகும்.

காங்கிரஸின் அங்கீகாரத்திற்குப் பின்னர் அமெரிக்கத் தொலைக்காட்சியில் பேசிய ஜோர்ஜ் புஷ் போர் தவிர்க்க முடியாதது என்பது இந்தவாக்களிப்பின் அர்த்தமல்ல என்று குறிப்பிட்டார் சமாதானத்திற்கான இறுதியான மிகச்சிறந்த வாய்ப்பை இது குறிக்கிறது என்றும், ஐ. நா. வின் காலக்கெடுவை ஈராக் அலட்சியப்படுத்த முடியாது என்ற தெளிவான செய்தியை இது குறிப்பிடுகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார்.

ஆனல் ஈராக்கோ மேற்கு ஆசிய ப்பி ச்சினை முழுவதையும் குறிப்பாகப் பாலஸ்தீனப் பிரச்சினையைத்தீர்க்க இதுவே நல்ல சந்தர்ப்பம் என்று குறிப்பிட்டுள்ளது.

பாலஸ்தீனத் தலைவர் யாசிர் அரபாத்தைச் சந்தித்தன் பின்னர் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய ஈராக்கிய வெளியுறவுத்துறை அமைச்சர் தாரிக் அஸீஸ் இந்தச்சந்தர்ப்பததைப் பயன்படுத்தியே மேற்காசியப் பிரச்சினைகளை தீர்க்கலாம் எனத் தெரிவித்தார். அத்துடன் இந்தவிடயம் குறித்து ஆராய ஈராக்கிய பாராளுமன்றத்தின் சிறப்புக் கூட்டம் இன்றுகூட்டப்படுகின்றது என்றும் தெரிவித்தார்.

இதேநேரம் வாஷிங்டனில் உள்ள ஈராக்கியத் தூதரகத்தில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை வெளியேறுமாறு அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ்பேகர் தெரிவித்தார். போர்ஏற்படும் இடத்து இந்தத் தூதரகத்தில் இருந்து தாக்குதல்கள் நடைபெறும் எனஎதிர்பார்ப்பதால் இத்தகைய முன்னேற்பாடுகள் செய்வதாகவும அவர் தெரிவித்தார்.

## மதுபான விலை திடீரென உயர்வு

(கொழும்பு)

மக்கள் மயப்படுத்தப்பட்டுள்ள தேசிய வடிசாராயகூட்டுத்தாபனம் தனது மதுபான உற்பத்தியின் விலையைத் திடீரென்று அதிகரித்துள்ளது. உற்பத்திச் செலவு அதிகரிப்பே இந்த விலை ஏற்றத்துக்குக் காரணமாம்.

கருப்பஞ் சாராயம் போத்தல் ஒன்று (கல்) ரூபா 86ல் இருந்து ரூபா 92 ஆக விலை உயர்த்தப்பட்டுள்ளது. தென்னஞ்சாராயம் ரூபா 101 லிருந்து ரூபா 113 ஆக விலை உயர்த்தப்பட்டுள்ளது வி. எஸ். ஓ ஏ சாராயம் ரூபா 135 லிருந்து ரூபா 152 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

டபிள் டிஸ்டில் சாராயம் ரூபா 140 லிருந்து ரூபா 157 ஆகவும் ஓல்ட் அராக் ரூபா 125 லிருந்து ரூபா 148 ஆகவும், சிறிலங்கா அராக் ரூபா 170 லிருந்து ரூபா 195 ஆகவும் உயர்த்தப்பட்டுளளது.

4 இளைஞர்

இதனைக் கண்ட சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் அதிர்ச்சி அடைந்தனர் உயிருடன் காயங்களுக்கு உள்ளானவர்களைத்தம்மிடம் ஒப்படைக்கும்படி கேட்டபோது அக்கோரிக்கையும் அதிரடிப் படையினரால் புறக்கணிக்கப்பட்டது சர்வதேச செஞ்சிலுவைச்சங்கத்தினர் திரும்பிய பின்னர் இக்காயமடைந்த நாற்பதுபேரும் அம்பாறை இராணுவமுகாமிற்கு மாற்றப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. ஆனால் தற்பொழுது இவர்கள் பற்றிய செய்தி எதுவும் தெரியவில்லை. இந்த இளைஞர்கள் தொடர்பாக இவர்களது குடும்பங்கள் பெரும் அச்சமடைந்துள்ளனர்.

ரவிராய்

நேற்று இந்திய வெளியுறவுத்துறை அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் வரும் புதன்கிழமை நடைபெற இருக்கும் பொது நலவாய பாராளுமன்ற சங்க கருத்தரங்கில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பாராளுமன்ற குழுவிற்கு தலைமை தாங்கி சபாநாயகர் ரவிராய் இலங்கைவரவுள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கருத்தரங்கு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மரண அறிவித்தல்

### திரு. வேலு சீனிவாசகம்

உரும்பராய் கிழக்கைச் சேர்ந்த வேலு சீனிவாசகம் காலமானார். அன்னார் பூரணத்தின் கணவரும். மார்க்கண்டு (கனடா), சிவசோதி, கமலாதேவி ஆகியோரின் தந்தையும். செல்வம், சரஸ்வதி, செல்லம்மா ஆகியோரின் மாமனாரும் அருண், பாபு, வாதன், பாமினி, யாழினி, அகிலன், அகில , கவித ஆகியோரின் பேரனும் ஆவார். அன்னாரது பூதவுடல் சிவன் வீதி கமலகத்திலிருந்து 15-1-91 செவ்வாய்க்கிழமை 12-00 மணியளவில் தகனக்கிரியைக்காக இளங்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்

சிவன் வீதி. சி. சிவசோதி (மணி)

உரும்பராய் கிழக்கு. (R/ 1030)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆ இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1991 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது

பொருளாதார

தின் முன்பாக ஆரம்பிக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டப் பேரணி மந்திகையிலுள்ள சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் இது தொடர்பாக மகஜர் ஒன்று பொதுமக்களால் கையளிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்ட பேரணியில் ஆண்கள், பெண்கள், சிறுவர்கள், இளைஞர்கள் என்ற வேறுபாடின்றி சுமார் இரண்டாயிரம் பேர்வரை கலந்து கொண்டனர்.

சர்வதேச செஞ்சிலுவை சங்க அதிகாரி மகஜரை பெற்றுக்கொண்டு உரை நிகழ்த்துகையில் இம்மகஜரை உரிய இடத்திற்கு சமர்ப்பிப்பதாக உறுதியளித்தார். (18)

சுதந்திர

மதி வழங்குமாறும் அந்தத் தீர்மானத்தில் கேட்கப்பட்டுள்ளது

அந்தத் தீர்மானத்தில் கூறப்படிருப்பதாவது;

1990 ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி பன்னிரண்டு ஐரோப்பிய நாடுகளின் மதிப்பீட்டின் அடிப்படையில் சிறிலங்காவில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளன.

சிறிலங்கா ஜனாதிபதிவழங்கிய வாக்குறுதியைஏற்று, அரசாங்கத்தின் கொள்கைகளுக்கும் திட்டங்களுக்கும் மதிப்பளித்து, உதவும் நாடுகள் சிறிலங்காவிற்கு பயன் பொருத்தமான நிதி உதவிகளை வழங்கின.

அப்படியிருந்தும், சிறிலங்காவில் காணாமற்போவது, சட்டத்துக்குப் புறம்பான முறையில் தண்டிக்கப்படுவது தொடர்பாக பலர் முறையீடு செய்துள்ளனர்

ஜனதா விமுக்திப் பெரமுனையினரின் கிளர்ச்சிகள் பலாத்காரத்திற்கும், அடக்கு முறை ஆட்சிக்கு வழிவகுத்தன. இதேவேளை டிசம்பர் 1989ஆம் ஆண்டளவில் தாம் ஜே வி. பியை அடக்கி ஒடுக்கிவிட்டதாக சிறிலங்கா அரசாங்கமே ஒப்புதல் அளித்துள்ளது.

அத்துடன் 1990 ஜூன் மாதம்முதல் மீளவும் விடுதலைப்புலிகளுக்கும் அரசாங்கத்துக்குமிடையில் இடம் பெறும் மோதல்கள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிரச்சினையை மேலும் மோசமாக்கியுள்ளது.

1500 மனிதஉரிமை தொடர்பான தஸ்தாவேஜுகளுடன்கூடிய முறைப்பாடுகள் ஐரோப்பிய பாராளுமன்றம் ஐக்கிய நாடுகள் சபையிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

சாதி சமய, இன வேறுபாடுகளின்றி அனைத்துச் சமூகங்களுக்கும் சமவாய்ப்புகளும், உரிமைகளும் வழங்கப்படாத பட்சத்தில சிறிலங்காவின் தற்போதைய பிரச்சினைகளுக்கு நிரந்தரமான ஓர்தீர்வைக் காணமுடியாது.

இப்படி ஐரோப்பிய பாராளுமன்றம் ஏகமனதாக நிறைவேற்றிய தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இலங்கையர் பாதிக்கப்படாமல் பார்ப்பதாக சவூதி அறிவிப்பு

(றியாட்)

சவூதிஅரேபியாவில் வேலை பார்க்கும் இலங்கையர்கள் வளைகுடா நெருக்கடியினால் பாதிக்கப்படாமல் இருப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக சவூதி அரேபிய வெளியுறவு அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கைக்கான சவூதி அரேபிய உயர் ஸ்தானிகரிடம் இதனைத் தெரிவித்துள்ளதாவும் ஏற்பாடுகளின் விபரங்கள் குறித்து உயர் ஸ்தானிகரிடம் கூறியிருப்பதாகவும் அந்த அமைச்சுவிடுத்துள்ளசெய்தியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது

## அடையாளம் காட்டிப் பெறவும்

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்திய சாலையின் பின்புறத்தே உள்ள விக்ரோறியா வீதியில் மாணவி ஒருவரால் தோடு சுரையோடு கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் தகுந்த அடையாளம் காட்டி ஈழநாதம் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஓய்வூதிய

வட்டாரங்கள் தெரிவித்தன புதிதாக இளைப்பாறிய அரசாங்க ஊழியர்கள், ஏற்கனவே இளைப்பாறியும் ஓய்வூதியத் திணைக்களத்தால அங்கீகாரம் பெறாதவர்கள் கொழும்பு ஓய்வூதியத் திணைக்களத்தின் அசமந்தம் போக்கினால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ளார்கள்.

இதேவேளை யாழ் குடா நாட்டில் 18,000 ஓய்வூதியகாரருக்கும், விதவைகளுக்குமான ஓய்வூதியக் கொடுப்பனவுகள் 1990 அக்டோபர், நவம்பர், டிசம்பர் ஆகிய மூன்று மாதங்களுக்கும் இதுவரை வழங்கப்பட வில்லை. ஓய்வூதியக் கொடுப்பனவுப் பற்றுச்சீட்டுக்கள் மேற்குறிப்பிட்ட மூன்று மாதங்களுக்கு வந்துள்ள போதிலும், அக்டோபர் மாதத்துக்கு மாத்திரமே ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதியம் வழங்கப்படுவதற்கான ஏற்படுகள யாழ். ஓய்வூதியப்பகுதியால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஏனைய இரண்டு மாதங்களுக்கான கொடுப்பனவுகளுக்கு காட்டுநிதி கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்படவில்லையாம்.

இனவிகிதாசார

''சட்டத்தின் முன் எல்லோரும் சமத்துவம்'' என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் உறுதிப்படுத்தப்பட்டிருந்தும். அடிப்படை உரிமை பொன்னம்பலம் இராமுப்பிள்ளைக்கு மறுக்கப்பட்டுளளது. எனவே சுங்க இயக்குநர் பதவிக்கு அவரது விண்ணப்பம் பரிசீலிக்கப்படும்போது இன விகிதாசார அடிப்படையில் பரிசிலக்கப்படக்கூடாது என உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

சுங்க உதவி அத்தியட்சகர் பொ. இராமுப்பிள்ளை பதவி உயர்வின்போது தமிழன் என்ற இன அடிப்படையில் தனது அடிப்படை உரிமை மீறப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டி உயர் நீதிமன்றத்தில் மனு ஒன்று தாக்கல் செய்திருந்தார்.

நீதியரசர்கள் தனித்தனியாகத் தீர்ப்பு வழங்கினர். பிரதம நீதியரசர் தமது தீர்ப்பில், 'இன அடிப்படையிலான எந்தவொரு பதவி உயர்வும் அடிப்படை உரிமையை மீறுவதாகும்'' என்று கூறியுள்ளார்.

பொதுநிர்வாக அமைச்சர், இவ்வமைச்சின் செயலாளர் ஆர். அபேரத்ன, நிதி அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம், சுங்க இயக்குநர் நாயகம் ஹின்கம உட்பட சட்ட மாஅதிபர் ஆகியோர் இராமுப்பிள்ளையின் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

கன்னியாஸ்திரி

ஓமந்தையிலிருந்து அளவெட்டிக்கு வந்தது பார்த்தீபன் (20 வயது) என்பவரே இவ் வழிப்பறிக் கொள்ளைச் சம்பவத்திலீடுபட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உதவி புரிபவராகநடித்த இளைஞர். தமது சைக்கிளில் கன்னியாஸ்திரியைஏற்றிவந்து இடைநடுவில் இறக்கிவிட்டு, அவர் வைத்திருந்த கைப்பையிலிருந்த 7 000 ரூபா ரொக்கப் பணத்தையும், பொருள்களையும் அபகரித்துக்கொண்டு தலைமறைவாகி விட்டதாகவும்தெரிவிக்கப்படுகிறது. பின்னர் வாகன மொன்றில் யாழ்ப்பாணம்வந்தகன்னியாஸ்திரிவிடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி தெல்லிப்பழை பிரதேசப்பொறுப்பாளர் திரு. திலகரிடம் சென்று புகார் செய்தார், விசாரணை மேற்கொண்ட பொறுப்பாளர் தீவிர விசாரணை நடத்தி சம்பந்தப்பட்ட நபரைக் கைது செய்தார். இந்நபர், அபகரித்தபணத்திலிருந்து சங்கிலி, மோதிரம், கைக்கடிகாரம் ஆகியன வாங்கியதாகவும், ஏனைய ஆதியின் கைபாக் இலிருந்த முக்கிய ஆவணங்களை கிழித்து வீசிவிட்டதாகவும் விசாரணையின் போது தெரிவித்துள்ளார்

வன்னிக்கு

ச்சினால் நியமிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

வன்னிப் பகுதி பிரிகேடியராக இருந்த சதீஸ் ஜெயசுந்தர இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் என்றும் அறியப்படுகிறது. (9

இறந்தோர்

நான்கு மோட்டார் சைக்கிள்களும் பலத்த சேதமடைந்துள்ளன.

இத்தாக்குதலில் உயிரிழந்தவர்களின் பெயர் விபரம் வருமாறு:

வைரமுத்து ஆனந்தரட்ணம் (40) உடுப்பிட்டி, விஜயரட்ணம் ஜெயந்தினி (20) பாவற்குளம், குழந்தைவேல் யோகேஸ்வரன் (24), சிவானந்தன் (60) கரவெட்டி, தியாகராசா (6 ஆம் வட்டாரம், குமுளமுனை, முல்லைத்தீவு), சு. ஜெயச்சந்திரன் (32) 10 ஆம் வீட்டுத்திட்டம், நெடுக்கேணி, ரட்ணவேல் (பரவிப்பாஞ்சான், கிளிநொச்சி), சுதாசினி (5) புளியம்பொக்கணை.

மேலும் ஒருவர் கடுமையான காயத்திற்குள்ளான நிலையில் யாழ்ப்பாணத்துக்கு கொண்டு வந்தபொழுது சாவகச்சேரிப் பகுதியில் உயிரிழந்தார். இவருடைய பெயர் தெரியவரவில்லை.

இக்குண்டு வீச்சுத் தாக்குதலில் காயமடைந்த இருபது பேரில் பதினைந்து பேரின் பெயர் விபரங்கள் வருமாறு:

வி செல்வராசா (28) முறிகண்டி, எஸ் தம்பிராசா (45) கிளிநொச்சி, தினேஷ் (5) கிளிநொச்சி, பத்மநாதன் 20)புளியம்பொக்கணை, சசிக்குமார் (14) கிளிநொச்சி, மதிஞானலிங்கம்(சித்தன்கேணி), நாராயணன்(68)கிளிநொச்சி,பிரபாகரன் (23) நெடுங்கேணி, கணபதி(69)கண்டாவளை, நாதன் (20) கிளிநொச்சி, ராமச்சந்திரன் (30) கிளிநொச்சி, அன்ரன் அலோசியஸ்(கிளிநொச்சி) ஜெயக்குமார்(30)கிளிநொச்சி, திருச்செல்வம்(26) கிளிநொச்சி ஆகியோராவர். (49)

இராணுவத்தின்

றவு முகாம் இராணுவத்தினர் முனைந்தபோது விடுதலைப் புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இடம் பெற்ற இந்த தாக்குலினை அடுத்து முகாம் திரும்பிய இராணுவத்தினர் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடாத்தினர்.